DINAKARAN 05 MAY 09

# ஈஷா இலவச நடமாடும் மருத்துவமனை துவக்கம்

**கோவை,மே 5:** கோவை ஈஷா யோக மைய கிராமபுத்துணர்வு இயக்கம் சார்பில் இலவச நடமாடும் மருத்துவமனை துவக்க விழா பொள்ளாச்சி தாலுக்கா ஜமீன் களத்தூரில் நடந்தது. விழாவில் ஜமீன் களத் தூர் ஆவின் செயலர் காளிசாமி வரவேற்றார்.

பொள்ளாச்சி வடக்கு ஒன்றிய தலைவர் மகேஸ்வரி நடராசன் தலைமை வகித்தார். ஜமீன்தார் வடிவேல் கோப்ப ண்ண மன்றாடியார் முன்னிலை வகித்தார். இதனையொட்டி இலவச சிறப்பு மருத்துவமுகாம் நடந்தது. இதில் கோவை ராமகிருஷ்ணா பல் மருத்துவமனை மற்றும் லோட்டஸ் கண்மருத்துமனை மருத்துவகுழுவினர் பொதுமக்களுக்கு சிகிச்சை அளித்தனர். டாக்டர் எஸ்.தங்கதுரை ஆரோக்கியம் மற்றும் விழிப்புணர்வு என்ற தலைப்பில் பேசினார். முடிவில் சண்முகசுந்தரம் நன்றி கூறினார்.